தேசிய திருவிவிலிய வினாடி வினா 2026—2033

# கடவுள், உடன்படிக்கைசெய்பவரும்



# திருஅவைத் தலைவரும்

## பிரிவு தரம் 8 & 9

தயாரிப்பு: தேசிய மறைக்கல்வி நடுநிலையம்
அனுசரனை : கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்

# திருவிவிலிய வினாடி வினா

## தரம் 8 - கருப்பொருள்

# உடன்படிக்கையாளரான கடவுள்

| தலைப்பு | பிரதான இறைவார்த்தை பகுதி | கற்றல் பெறுபேறு | மேலதிக வசனங்கள் | ஏன், காரணம் |
|---|---|---|---|---|
| ஏதேன் தோட்ட உடன்படிக்கை | தொ.நூ. 3:9 - 15, 21 | பாவத்திற்கு/வீழ்ச்சிக்கு பின்னரான கடவுளின் முதலாவது மீட்பின் வாக்குறுதியை கற்றுக்கொள்வர். | தொ.நூ. 3:15<br>தி.பா. 25:10<br>எபி. 8:10 | கடவுள் உடன்படிக்கை வரலாற்றை நம்பிக்கையுடன் ஆரம்பிப்பதைக் காட்டுகிறது. |
| ஆபிரகாமுடன் உடன்படிக்கை | தொ.நூ. 12:1-3,7 | நாடு, சந்ததி, ஆசீர் என்பன இறைவனின் வாக்குறுதி என்பதை அறிந்துகொள்வர். | தொ.நூ. 15:6<br>கலா. 3:29<br>எபி. 6:13-14 | கடவுளின் உடன்படிக்கை எதிர்நோக்கையும் நம்பிக்கையையும் கட்டியெழுப்புகிறது |
| நோவாவுடன் உடன்படிக்கை | தொ.நூ. 9:8-17 | கடவுள், வெள்ளப்பெருக்கின் பின் படைப்பை பாதுகாப்பதற்காக கொடுத்த வாக்குறுதியை அனுபவத்தில் காண்பர். | தொ.நூ. 9:11<br>எசாயா 5:49<br>தி.பா. 145:13 | உடன்படிக்கை இரக்கத்தையும் பாதுகாப்பையும் காட்டுகின்றது. |
| இயேசுவும் மரியாளும் | லூக். 2:22 - 40<br>லூக். 2:41 - 47<br>யோவான் 2:1-11, 19: 26-28 | உடன்படிக்கை நிறைவேற்றத்தின் மையமாக இயேசுவும் மரியாளும் இருப்பதை காண்பர். | யோவான் 1:14<br>கலா. 4:4<br>மத். 1:23 | கடவுளுடைய உடன்படிக்கை கிறிஸ்துவில் முழுமை அடைகின்றது என்பதை காட்டுகின்றது. |
| திருமண உடன்படிக்கை | மத். 19:6 | திருமணம் அன்பின் உடன்படிக்கை என்றும் பிரமாணிக்கத்திற்கு உரியது என்பதையும் புரிந்து கொள்வர். | எபே. 5:25<br>1கொரி. 13:8<br>மலா. 2:14 | கடவுளுடைய பிரமாணிக்கமான அன்பின் உடன்படிக்கையை பிரதிபலிக்கின்றது. |
| விசுவாச அறிக்கை | திருத்தூதர்களின் நம்பிக்கை அறிக்கை 2, 3 | இயேசு கிறிஸ்துவிலும் அவரது மனுவுருவிலும் நம்பிக்கை ஆழப்படுத்துவார். | யோவான் 3:16<br>யோவான் 1:14<br>கொலோ. 1:15-16 | இயேசுவின் வாழ்விலும் பணியிலும் உடன்படிக்கை நிறைவடைகிறது. |
| உடன்படிக்கை செபம் | செக்கரியாவின் புகழ் பாடல் (லூக்.1:68 - 79) | கடவுளின் உடன்படிக்கை வாக்குறுதிகளுக்காக அவரை புகழ்வர். | லூக். 1:68<br>தி.பா. 34:1<br>புல. 3:22 | இறைவனுடைய இரக்கத்திற்கும் பிரமாணிக்கத்திற்கும் நன்றியுடையவராய் இருத்தல். |

# திருவிவிலிய வினாடி வினா

## தரம் 9 - கருப்பொருள்

## கடவுள் உடன்படிக்கைசெய்பவரும் திருஅவை தலைவரும்

| தலைப்பு | இறைவார்த்தைப் பகுதி | கற்றல் பெறுபேறு | மேலதிக வசனங்கள் | ஏன், காரணம் |
|---|---|---|---|---|
| மோசேயுடனான உடன்படிக்கை | வி.ப. 19:3-6 | இஸ்ரயேலருடனான கடவுளின் உடன்படிக்கை: புனிதத்துவத்திற்கான அழைப்பை விளங்கிக்கொள்வர். | “எனக்கு நீங்கள் குருத்துவ அரசராகவும், தூய மக்களினமாகவும் இருப்பீர்கள்…” வி.ப. 19:6 | கடவுள் தம் மக்களை வேறாக்கி, புனிதப்படுத்தும் திட்டத்தைக் காட்டுகின்றது |
| புதிய உடன்படிக்கை பற்றிய இறைவாக்கு | எரேமியா 31:31-34 | இதயங்களில் எழுதப்பட்ட சட்டம் கடவுளின் வாக்குறுதி: இது இயேசுவின் வருகைக்கான ஆயத்தம் என்பதை அறிவர். | “… என் சட்டத்தை அவர்களது உள்ளத்தில் பதிப்பேன் அதை அவர்களது இதயத்தில் எழுதி வைப்பேன்” எரே. 31:33 | கடவுள் உள்ளாந்த மாற்றத்தையும் தன்னுடனான நெருக்கமான உறவையும் விரும்புகிறார். |
| கல்வாரி உடன்படிக்கை | 1கொரி. 11:23-26 லூக். 22:20 | நற்கருணையை புதிய உடன்படிக்கையாக அடையாளம் கண்டு அதை இயேசுவின் பலியோடு தொடர்புபடுத்துவர். | “இந்த கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படுகின்ற எனது இரத்தத்தால் நிலைபடுத்தப்படும் புதிய உடன்படிக்கை.” லூக். 22:20 | ஒவ்வொரு திருப்பலியும் கிறிஸ்துவின் மரணத்தைப் பறைசாற்றி அவரது மீட்பில் பங்குகொள்ளச் செய்கிறது. |
| மரியாள் உடன்படிக்கையின் பேழை | தி.வெளி. 11:19 லூக். 1:35 | மரியாளை பழைய ஏற்பாட்டு உடனபடிக்கையின் மாதிரியாக காண்பர். மரியாள் கீழ்ப்படிதலின் முன்மாதிரிகை. | “தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும்.” லூக். 1:35 | மரியாள், உண்மையான உடன்படிக்கை பேழையான இயேசுவை சுமந்தார். இது கடவுளின் திட்டத்துடன் நம்பிக்கையுடன் இணைந்து செயல்பட கற்பிக்கின்றது |
| திருத்தூதர்களின் அழைப்பு | மத். 10:1-4 லூக். 6:12-16 | திருத்தூது துப் பணியை புரிந்துகொள்ளுதல். இறைவனின் அழைத்தலில் நிலைத்திருக்க செபமும் தெளிர்ந்து தேர்தலும் தேவை எனப் புரிந்துகொள்வர். | “இயேசு தம் சீடர் பன்னிருவரையும் அழைத்தார். … அவர்களுக்கு அதிகாரம் அளித்தார்.” மத். 10:1 | திருத்தூதர்கள் கிறிஸ்துவுக்கு சாட்சியாயிருந்து திரு அவையில் அவருடைய பணியை தொடர்கிறார்கள். |

| | | | | |
|---|---|---|---|---|
| குருத்துவ உடன்படிக்கை | தி.பா. 110:4<br>எபி. 5:1-10 | குருத்துவம் என்பது வாழ்நாள் உடன்படிக்கை என அறிந்து கொள்வர்: குருமார் மற்றும் ஆயரின் வகிபாகம். | "மெல்கிசெதேக்கின் முறைப்படி நீர் என்றென்றும் குருவே என்று ஆண்டவர் ஆணையிட்டுச் சொன்னார் அவர் தம் மனதை மாற்றிக்கொள்ளார். தி.பா. 110:4 | ஆன்மீக அதிகாரம், பொறுப்பு மற்றும் உடன்படிக்கை சார்ந்த சேவையை முன்னிலைப்படுத்தல் முன்னிலைப்படுத்தல்.' |
| விசுவாச அறிக்கை பிரமாணங்கள் பகுதி 4, 5, 9 | திருத்தூதர்களின் விசுவாச அறிக்கை பகுதி 4, 5, 9 | விசுவாச பிரமாண பகுதிகளை மனப்பாடமாக விளக்கி கூறி அவற்றை உடன்படிக்கை வாக்குறுதிகளுடனும் திருஅவை பணிகளுடனும் தொடர்புபடுத்துவர். | "வாக்கு மனிதனானார். நம்மிடையே குடிகொண்டார்." யோவா. 1:14<br><br>"ஆதலால் நீங்கள் சென்று எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள்" மத். 28:19 | கிறிஸ்து தூய ஆவி மற்றும் திரு அவை மீதான நம்பிக்கையை வலுப் படுத்துகின்றது.<br><br>நம்பிக்கையை செயலுடன் தொடர்புபடுத்துகின்றது. |
| செபம் - மரியாளின் புகழ்பாடல் | லூக். 1:46 - 56 | மகிழ்ச்சி மற்றும் நன்றியின் உடன்படிக்கைப் பாடலாக செபித்து இறைவனின் இரக்கத்தை அறிந்துகொள்வர். | "ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது". - லூக் 1:46<br><br>"வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார். தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்" - லூக் 1:52 | அன்றாட வாழ்வில் நன்றியுணர்வு, நம்பிக்கை மற்றும் உண்மையுள்ள கீழ்ப்படிதலை ஊக்குவிக்கிறது |